வேண்டும் என்ற காரணத்திற்காக நல்ல தம்பி என்ற திரைப் படத்தை எடுத்தார்கள். அரசு அதற்கு சிறப்புப் பரிசு வழங்கு வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஒவ்வொரு ஆண்டும், முதல் ஆண்டு வெளிவந்திருக்கிற படங்களை எடுத்துத்தான், அவைகளைப் போட்டிக்கு உட்படுத்தி அதிலிருந்து தேர்ந்தெடுத்துத் தான் பரிசுகள் வழங்கவேண்டும். முன்பிருந்த அரசு இதைத் செய்திருக்க வேண்டும். செய்திருந்தால், நாம் மகிழ்ந்திருக்கலாம்.

திரு. கே. விநாயகம் : பொதுவாக நாடும் வளரவேண்டும், நாட்டிலே பொருளாதாரம் மற்றவைகள் வளரும்பொழுது, கலையும் வளரவேண்டும். ஆனால், கலையைப் பொறுத்தவரையில் நமது அரசு அதற்கென்று எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது என்று தெரிகிறது. மத்திய சர்க்காரில் கூட மினிஸ்டர் ஃபார் கல்சரல் அஃபேர்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதுமாதிரி நம்முடைய அரசாங்கத்தில் ஒரு அமைச்சரை வைத்து, எந்தக் கலையாக இருப்பினும் அதை வளர்ப்பதற்கு தனியாக ஒரு அமைச்சரை அமைச்சர் குழுவில் சேர்த்துக்கொள்ள கலைஞர் முற்படுவாரா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கலைஞர் ஒருவரே முதல் அமைச்சராக இருக்கிற காரணத்தினால், அந்தப் பிரச்சினை இப்பொழுது எழவில்லை.

Grant of loans to vegetable growers

*682 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(a) whether here are proposals under the consideration of the Government to offer loans to vegetable growers in the State ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) தமிழ்நாட்டில் காய்கறி விளைச்சல் வளர்ச்சிப் பணித் திட்டத்தின் கீழ் காய்கறி பயிரிடுபவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பருவத்தில் எக்கர் ஒன்றுக்கு ரூ. 120 என்று குறுகிய காலக் கடன், பேரளவு ரூ. 240 என்பதற்குட்படும், இருபோகக் காய்கறிப் பயிரிடுபவர் ஒவ்வொருவருக்கும் ரூ. 480 என்ற பேரளவுக்குட்பட்டும், சொந்தப் பிணையத்தின் மேல் வழங்கப் படுகிறது. கடன் தொகை விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

விதைகள்	ரூ. 5–00
உரம்	ரூ. 40–00
பயிர்வளர்க்க ரொக்கம்	ரூ. 70–00
பூச்சிக்கொல்லி மருந்துகள்	ரூ. 5–00
மொத்தம்	ரூ. 120–00

1970 ஏப்ரல் 4]

சென்னை மாநகரத்திற்கான காய்கறி விற்பனைப் பணித் திட்டத்தின்கீழ், சென்னையைச் சுற்றி 80 கி.மீ. தொலைவிற்குள் பதிவான காய்கறி பயிரிடுவோர் ஒவ்வொருவருக்கும், காய்கறி பயிரிட ஏக்கர் ஒன்றிற்கு ரூ. 250 வீதம் கடன் அளிக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : We are deficit in vegetable production To re-equip the shortage will this Government come forward to introduce vegetable package scheme in areas suitable for vegetable cultivation like Hosur taluk which is having a fine climate for growing English vegetables and if so, when it will be introduced?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பாக்கேஜ் ப்ரோகிராம் இல்லை என்றாலும், இப்பொழுது அங்கே உருளைக் கிழங்கு, மற்ற காய்கறிகள், மிளகாய் இவைகளெல்லாம் பயிரிடப் பட்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற உணவுக்குத் தேவையான காய்கறிகளை சில சங்கங்கள் மூலமாக பயிரிடுவதற்கு அவசியம் ஏற்பட்டால், அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்வதுபற்றி இந்த அரசு ஆலோசிக்கும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, காய்கறித் தோட்டங்களில் காய்கறிகள் பயிரிடுவதற்காக அரசாங்கத்தில் கடன் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கடனை யாரிடமிருந்து பெறுவது, விவசாய இலாகாவிலிருந்து பெறுவதா அல்லது பஞ்சாயத்து யூனியனிலிருந்து பெறுவதா என்று விளக்கமாக சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தக் கடன் விவசாய இலாகாவிலிருந்து தான் பெறப்படும் என்று நான் கருதுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மாமிச உணவு சாப்பிடக் கூடியவர்களுக்குச் சாதகமாக ஆடு, மாடு, கோழி வளர்ப்பதற்கு மானியம் கொடுக்கிறார்கள் அல்லவா, அதைப்போல காய்கறி சாப்பிடுகிறவர்களுக்குச் சாதகமாக காய்கறி வளர்ப்பதற்கு கிராண்டு, மானியம் வழங்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கடனைத் தான் கொடுத்துக்கொண்டு வருகிறோமே தவிர, மானியம் கொடுக்க ஒரு திட்டமும் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Some time back when the President of the **World Bank**came to Madras and had a discussion with the Members of the Cabinet, he put a question asking whether this Government was producing vegetables which could be sent to European markets to earn foreign exchange. Since we did not develop vegetables that could be sent to foreign countries we were not able to give a proper answer at that time. We can also get a loan for growing vegetables from the World Bank. So will this

Government come forward to find out suitable areas and grow vegetables on a large scale for sending them to foreign countries and earning foreign exchange?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: உலக பாங்கைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டார்களா என்பதற்கு தகவல் இப்பொழுது இருக்கவில்லை. அப்படி நிலைமை இருக்குமானால், அரசாங்கம பரிசீலிக்கலாம். இப்பொழுது அந்த நிலைமை இல்லை.

திரு. எஸ். அக்னிராஜு: சில வங்கிகள் தனிப்பட்ட முறையில் விவசாயிகளுக்கு இப்பொழுது கடன கொடுத்து வருகின்றன. காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு அப்படிப்பட்டக் கடனை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்தக் கடன் வேளாண்மைத் துறை மூலமாகத்தான் விவசாயிகளுக்குத் தரப்பட்டுவருகிறது. பாங்குகளின் மூலமாகவும், ஊராட்சி ஒன்றிப்புகளின் மூலமாகவும் தருகின்ற விவரம் இல்லை.

Firms black listed in City

* 683 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state:

(a) whether the Commercial Taxes Department has black listed firms in Madras City during 1968–1969–1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

சித்திரைப் பொருட்காட்சியில் கேளிக்கை வரி விலக்கு

*** 684 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு உணவு, வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, மதுரையில் நடைபெற்ற "சித்திரைப் பொருட்காட்சியில்" ஏற்பாடு செய்யப்பட்ட சினிமா, நடனம், நாடக நிகழ்ச்சிகளுக்கு "கேளிக்கை வரி"யிலிருந்து விலக்கு அல்லது சலுகை அளிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) & (இ) நடனம், நாடகம் இவற்றிற்கு கேளிக்கை வரி இல்லை. ஆனால் திரைப்படக் காட்சிகளுக்கு கேளிக்கை வரி உண்டு. 1969-ம் ஆண்டு மதுரையில் நடந்த சித்திரைப் பொருட்காட்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட திரைப்படக் காட்சிகளுக்கு, கேளிக்கை வரியினின்றும் விலக்கு அளிக்கப்படவில்லை.